**பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கரிசணைகள்**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி), மார்ச் 12, 2021 அன்று வெளியிடப்பட்ட பயங்கரவாதத் தடுப்பு (வன்முறையான மட்டுமீறிய மதக்கொள்கையைக் கொண்டிருப்பதற் கெதிரான தீவிரமயமற்றதாக்குதல்) ஒழுங்குவிதி 2021 இன் இல.01 (இதன்பின் ஒழுங்குவிதிகள் எனப்படும்) இனால் பெரிதும் அதிர்ச்சியடைந்தது. பயனுறுதியான உரிய செய்முறைகளுக் கான உத்தரவாதங்களில்லாது, ஒழுங்குவிதிகள் ஆட்களின், விசேடமாக மத மற்றும் இன ரீதியான சிறுபான்மையினர், மற்றும் முக்கியமாக அரசியல் இணக்கமல்லாதவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் என்பவற்றை மேலும் பாதிக்கும் விதத்தில் வரையப்பட்டிருந்தன. மேலும், மக்களின் நீதி அதிகாரங்கள் அரசாங்கத்தின் நிறைவேற்றுப் பிரிவுக்கு கைமாற்றப்பட்டு, ஒழுங்குவிதிகள் அதிகார வேறாக்கலின் ஒரு தெளிவான மீறலாக இருந்தன. இணக்கப்பாடற்ற ஒரு சட்டமான கொடும் பயங்கரவாத தடைச்சட்டத்தை (PTA), இலங்கை அரசியலமைப்பில் ஒரு கருவியாக்கிக் கொள்ளவும் மற்றும் அதனை நிலைநாட்டுவதற்குமான ஓர் அண்மைய முயற்சியே, இது என்பதை மா.கொ.நி கவனத்தில் கொள்கிறது. அதனால், இவ்வொழுங்குவிதி சிவில் சுதந்திரங்கள் மற்றும் இலங்கையின் சட்டவாட்சி என்பவற்றின் மீது ஒரு மோசமான தாக்கத்தைக் கொண்டிருக்குமென்பதால், உடனடியாக அது மீளப் பெறப்படல் வேண்டும்.

'புனர்வாழ்வு' என்பதற்கான ஏற்பாடு மற்றும் உரிய செயன்முறைத் தரங்கள் மீதான தாக்கம் என்பவை தொடர்பில் மா.கொ.நி குறிப்பான கரிசனையை உடையதாகவுள்ளது. குறிப்பிட்ட ஆட் குழுக்களுக்கான புனர்வாழ்வளித்தலை ஒழுங்குவிதிகள் தெரிவிக்கின்ற வேளையில், அவற்றின் பிரயோகம், ஒரு தகுதி வாய்ந்த நீதிமன்றத்தின் முன் எந்த சட்ட நடவடிக்கைகளும் நடத்தப்படாது இரண்டு வருடங்கள் வரை (ஒரு முதற் கட்டளை ஒரு வருடம் வரையானது, அதன் பின்னர் அது மேலுமொரு வருடத்திற்கு நீடிக்கப்படக் கூடியதானது) தனிப்பட்ட ஆட்களின் சுதந்திரம் மறுக்கப்படுவதை ஏற்படுத்துகிறது. அத்தகைய ஏற்பாடு, எந்தவொரு உரிய உத்தரவாதச் செய்முறைகளையும் அளிக்காது தனிப்பட்டவர் களுக்கு அவர்களின் சுதந்திரம் மறுக்கப்படுவதை ஏற்படுத்தும்.

இன மற்றும் மத ரீதியான சிறுபான்மையினரை இலக்கு வைப்பதற்கு பயங்கரவாத தடைச்சட்டத்தின் முறையற்ற விதத்திலான பாவனையை இலங்கையின் கடந்த காலம் கண்டதுடன் மா.கொ.நி பயங்கரவாத தடைச்சட்டத்தின் இரத்துச் செய்தலுக்கு கடந்த பல வருடங்களாக குரல் எழுப்பி வந்துள்ளதோடு அவ்வழைப்பை இங்கே மீண்டும் வலியுறுத்துகிறது. நீதிக் கண்காணிப்பு மற்றும் பயனுறுதியான உரிய செயன்முறைத் தரங்கள் என்பவற்றின் நீக்கத்துடன், இவ்வொழுங்கு விதிகள் பயங்கரவாத தடைச்சட்டத்தால் அளிக்கபட்ட மட்டுப்பாடான பாதுகாப்புகள் கூட நீக்கப்படும் ஒரு நிலைமையை உருவாக்கும் என்பதுடன் இலங்கை அரசியலமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்டை உரிமைகளுக்கு மிகவும் கடுமையான ஆபத்துகளை உருவாக்குகிறது.

மேலதிகமாக, இந்த ஒழுங்குவிதிகளின் தெளிவற்றதும் மற்றும் மிகப்பரந்ததுமான தன்மை எச்சரிக்கை அளிப்பதாக அமைகின்றதுடன் துஷ்பிரயோக நிலைமைகளுக்கும் இட்டுச் செல்ல முடியும். உதாரணத்திற்கு, 'புனர்வாழ்வு' எதனைக் கொண்டமைகிறது அல்லது ஒழுங்கு விதிகளின்படி உருவாக்கப்படவுள்ள, 'ஒருங்கிணைப்பு மையங்களில்' என்ன புனர்வாழ்வு நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படவுள்ளன என்பது பற்றி மிகச் சிறியளவான விபரங்களே அளிக்கப்பட்டன. மேலும், பேணப்பட வேண்டிய நிலைமைகள் மற்றும் கண்காணிப்புப் பொறிமுறை என்பவற்றின் நிபந்தனைகளின்படி, இந்த புனர்வாழ்வு மையங்கள் என்ன சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்படுபவையாக உள்ளன என்பது பற்றி தகவல்கள் இல்லாதுள்ளது. அதிகரித்த இராணுவமயப்படுத்தப்பட்ட ஆட்சி மற்றும் பலவீனமடையும் சுயாதீன நிறுவனங்கள் என்பவற்றின் ஒரு பின்னணியில் இக்கரிசனைகள் உரத்து எழுப்பப்படுகின்றன.

இறுதியாக, ஒரு முழுமைப்படுத்தலாக குற்றவியல் நீதி முறைமையினுள் புனர்வாழ்வுச் செய்முறைகளை ஒருங்கிணைப்பதன் தேவையை மா.கொ.நி அங்கீகரிக்கிறது. ஆனால், இது சட்டபூர்வமாகவும், உரிய செயன்முறைத் தரங்களுக்கான மதிப்புடனும், மற்றும் அரசியலமைப்பு ரீதியாக உத்தரவாதமளிக்கப்பட்ட உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின்

கடைப்பிடித்தலுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும். இன முரண்பாடுகளைத் தூண்டுவதற்கான கூற்றுகள் என்பதன் அடிப்படையிலான குற்றச்சாட்டுகளின் பேரில் அதிகரித்தளவிலான கைதுகள் மற்றும் தடுத்து வைத்தல் உள்ள பின்னணியில் இவை அத்தியாவசியமானவை.